# வருடாந்த அறிக்கை

# 2018

# அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு

# (SOND)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நிறுவனம் கடந்த 20 வருடங்களாக செயற்பட்டு வருகின்றது. எமது நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் பின்வரும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1. சிறுவர் பாதுகாப்பு செயற்திட்டம் (Child Protection project)
2. சுகாதாரமும் போசாக்கும் செயற்திட்டம் (Health & Nutrition Project)
3. மிதிவெடி அபாயக்கல்வித்திட்டம். (Mine Risk Education project)
4. தகவல் வளநிலையம் (Information Centre)
5. விசேட செயற்பாடுகள் (Special Activities)

## சிறுவர் பாதுகாப்பு செயற்திட்டம் (Child Protection project)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யுனிசெவ் நிறுவனத்தினூடாக சிறுவர் பாதுகாப்பு செயற்றிட்டம் எமது நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் 9 கிராம சேவையாளர் பிரிவிலும் கோப்பாய் பிரதேச செயலகர் பிரிவில் 1 கிராம சேவையாளர் பிரிவிலும் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**இச்செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகள் வருமாறு**

- சமூக மட்ட அமைப்புக்களின் மீள் உருவாக்கலும் வலுப்படுத்தலும்
- கிராம சிறுவர் அபிவிருத்திக்குழு மீள் உருவாக்கலும் வலுப்படுத்தலும்
- சிறுவர் கழகங்களின் மீள் உருவாக்கலும் அவர்களுக்கான பயிற்சி வழங்கலும்
- சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- அரச உத்தியோகத்தர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- கிராம சிறுவர் அபிவிருத்திக்குழு மற்றும் சிறுவர் கழகங்களுக்கான மாதாந்த கூட்டங்களை நடாத்துதல்
- சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஆய்வரங்கத்தினை நடாத்துதல்
- சிறுவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் சிறுவர் தினத்தினை கொண்டாடுதல்
- வீதி நாடகங்களின் மூலம் சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வுகளை நடாத்துதல்
- இளையோருக்கான பயிற்சிகளை வழங்குதல்.

**இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்**

- 9 கலந்துரையாடல்களின் மூலம் 202 கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் சமூக மட்ட அமைப்புக்களின் மீள் உருவாக்கலுக்கான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதன் மூலம் இச் சமூக மட்ட அமைப்புக்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

- 10 கலந்துரையாடல்களின் மூலம் 358 கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்களின் பிரதிநிதிகளுடன் கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்களின் மீள் உருவாக்கலுக்கான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதன் மூலம் இக்கிராமமட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுக்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

- 11 சிறுவர்கழகங்களுக்கான கலந்துரையாடல்களின் மூலம் 356 சிறவர்களுடன் சிறுவர் கழகங்களின் மீள் உருவாக்கலுக்கான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதன் மூலம் இச் சிறுவர் கழகங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

- கிராம மட்ட அமைப்புக்களை வலுப்படுத்துவதற்கான 22 பயிற்சி நெறிகளை நடாத்தியபோது 323 கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன் தமது கடமைகள் பொறுப்புகள் முகாமைத்துவம் மற்றும் ஆவணப்படுத்தும் திறன்களை பெற்றுள்ளனர்.

- கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்களை வலுப்படுத்துவதற்கான 12 பயிற்சி நெறிகளை நடாத்தியபோது 254 கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன் தமது கடமைகள் பொறுப்புகள், சிறுவர் பிரச்சனைகளை கையாளுதல் மற்றும் ஆவணப்படுத்தும் திறன்களை பெற்றுள்ளனர்.

- சிறுவர்களுக்கான ஆளுமை விருத்தி தொடர்பான 17 பயிற்சிகளை வெவ்வேறு தலைப்புக்களில் நடாத்தியவேளை 501 சிறுவர்கள் பங்குபற்றியிருந்ததுடன் ஆளுமை விருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

- பிரதேச மட்ட ஒருங்கிணைப்பு கூட்டங்கள் 5 நடைபெற்றபோது கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட 272 பேர் கலந்துகொண்டனர்.

- அரச உத்தியோகத்தர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 4 விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்திய போது 85 அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

- சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஆய்வரங்கமொன்றை நடாத்தியவேளை மாவட்டமட்ட, பிரதேசமட்ட, கிராமமட்டத்தை சேர்ந்த அதிகாரிகள் உட்பட 103 பேர் கலந்துகொண்டதுடன் கிராம மட்டங்களிலுள்ள தீர்க்கப்பட முடியாத பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

- சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 29 வீதி நாடகங்களை நிகழ்த்தியதன் மூலம் 10226 பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பாக விழிப்புணர்வடைந்துள்ளனர்.

- சிறுவர்களுக்கான ஆளுமைத்திறனை வெளிப்படுத்துவதற்கான சிறுவர் தின நிகழ்வினை நடாத்தியபோது 181 சிறுவர்கள் கலந்து கொண்டதுடன் நடனம், பேச்சு, பாடல், நாடகம் போன்ற நிகழ்வுகளின் மூலம் தமது திறன்களை வெளிப்படுத்தினார்கள்.

- சிறுவர் கழகங்களுக்கான 65 மாதாந்த கூட்டங்களை நடாத்தியதன் மூலம் 1805 சிறுவர்கள் கலந்துகொண்டு திறன் விருத்தி மற்றும் விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

- கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்களுக்கான 47 மாதாந்த கூட்டங்களை நடாத்தியவேளை நடாத்தியபோது 254 கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன் சிறுவர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு முன் வந்துள்ளனர்.

- இளையோர்களுக்கான எதிர்காலத் திட்டமிடல் தொடர்பான பயிற்சியினை நடாத்தியபோது தெல்லிப்பளை பிரதேசத்தை சேர்ந்த 45 ஆர்வமுள்ள இளையோர் பங்குபற்றியிருந்தனர்.

- சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக 5 பொதுக்கூட்டங்களை நடாத்தியபோது 304 பொதுமக்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வு அடைந்துள்ளனர்.

- திட்டப்பிரதேசத்திலுள்ள கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்கள், கிராம மட்ட அமைப்புக்கள் மற்றும் பாடசாலைகளுக்கான காகிதாதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- பாடசாலைகளில் மரநடுகையை ஊக்குவிக்கும் நோக்குடன் திட்டப்பிரதேசத்திலுள்ள 9 பாடசாலைகளில் மரங்களை நாட்டியதுடன் அவற்றின் பாதுகாப்பிற்கான கூடுகளையும் வழங்கியுள்ளோம்.

- பாடசாலைகளில் கழிவகற்றல் முகாமைத்துவத்தினை உரியமுறையில் பேணுவதை நோக்குடன் திட்டப்பிரதேசத்திலுள்ள 15 பாடசாலைகளில் கழிவகற்றலுக்கான 56 கூடைகள் வழங்கப்பட்டது.

- பாடசாலை மாணவர்களிடையே நல்ல எண்ணங்களை உருவாக்கும் நோக்குடன் திட்டப்பிரதேசத்திலுள்ள 9 பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 20 விளம்பர பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 130 சுவரொட்டிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

- பொதுமக்களுக்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 19 விளம்பர பதாதைகள் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

- தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் பலநோக்கு மண்டபம்(One stop center) மற்றும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் சிறுவர் பாதுகாப்பு அலகு(Child desk) ஆகியவற்றிற்கான தளபாடங்கள், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் கணணி இயந்திரம் போன்றவை வழங்கப்பட்டு தற்போது சிறப்பாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

- கிராம சிறுவர் அபிவிருத்திக்குழுக்களின் கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான 10 விளம்பர பதாதைகள் அந்தந்த கிராம சேவையாளர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## சுகாதாரமும் போசாக்கும் செயற்திட்டம் (Health & Nutrition project)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யுனிசெவ் நிறுவனத்தினூடாக சுகாதாரமும் போசாக்கும் செயற்றிட்டம் எமது நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் 45 கிராம சேவையாளர் பிரிவிலும் கோப்பாய் பிரதேச செயலகர் பிரிவில் 1 கிராம சேவையாளர் பிரிவிலும் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**இச்செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகள் வருமாறு**

- தாய்மார் கழகங்களின் மீள் உருவாக்கலும் வலுப்படுத்தலும்

- தாய்மார் கழகங்களை வலுப்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்கல்

- MOH பணியாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்

- கிராமிய சுகாதார தொண்டர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்.

- சுகாதாரமும் போசாக்கும் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்.

- ❖ IYCF material தொடர்பாக தாய்மார்கழகங்களுக்கான பயிற்சியை வழங்கி தாய்மார் கழகங்களுக்கான புத்தகங்கள் வழங்குதல்.

- ❖ நாம் நலமாக வாழ்வோம் என்னும் புத்தகத்தினை அச்சிட்டு விநியோகித்தல்

**இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்**

- ➢ 49 கலந்துரையாடல்களின் மூலம் 861 தாய்மார் கழக பிரதிநிதிகளுடன் தாய்மார் கழகங்களின் மீள் உருவாக்கலுக்கான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதன் மூலம் இத்தாய்மார் கழகங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

- ➢ தாய்மார் கழகங்களுக்கான தலமைத்துவமும் தொடர்பாடலும், போசாக்கு மற்றும் இயற்கை விவசாயம் தொடர்பான 9 பயிற்சிகளை நடாத்தியபோது 210 தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

- ➢ தாய்மார் கழகங்களுக்கான முன்பிள்ளைப்பருவம் மற்றும் இளம் சிறார்களுக்கான உணவூட்டல் தொடர்பான 2 பயிற்சிகளை நடாத்தியபோது 62 தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

- ➢ MOH பணியாளர்களுக்கான 5 வகையான 7 பயிற்சிகளை நடாத்தியபோது 329 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

- ➢ கிராமிய சுகாதார தொண்டர்களுக்கு தலமைத்துவமும் தொடர்பாடலும், அணிதிரட்டலும் ஆவணப்படுத்தலும் மற்றும் போசாக்கு ஆகிய தலைப்புக்களில் 3 பயிற்சிகளை 30 பேர் பங்குகொண்டனர்.

- ➢ அரச உத்தியோகத்தர்களுக்கு போசாக்கு மற்றும் பல்துறை சார்ந்தோருடனான அணுகுமுறை ஆகிய தலைப்புக்களில் 2 பயிற்சிகளில் 170 பேர் பங்குகொண்டனர்.

- ➢ தாய்மார் கழகங்களுக்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 2 பயிற்சிகளை நடாத்தியபோது 56 தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

- ➢ IYCF material தொடர்பாக தாய்மார் கழகங்களுக்கான பயிற்சியை வழங்கி 49 கழகங்களுக்கான புத்தகங்கள் வழங்கப்பட்டன.

- ➢ நாம் நலமாக வாழ்வோம் என்னும் புத்தகத்தினை 1000 பிரதிகள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

## மிதிவெடி அபாயக்கல்வித் திட்டம் (Mine Risk Education Project)

மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருட்களின் பாதிப்புக்களில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்குடன் மிதிவெடி அபாயக் கல்வித்திட்டம் 2009 ஆம் ஆண்டில் இருந்து யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இச்செயற்றிட்டமானது பிரதானமாக மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிநிலையிலுள்ள வெடிபொருட்களிள் அபாயம் உள்ளதென அடையாளம் காணப்பட்ட யாழ் மாவட்டத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் 20 கிராம சேவையாளா் பிரிவிலும் கோப்பாய் பிரதேச செயலகா் பிரிவில் 2 கிராம சேவையாளா் பிரிவிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**இச்செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகள் வருமாறு**

- ❖ சமூகத்தை மையப்படுத்திய மிதிவெடி அபாயக்கல்வி

- ❖ மிதிவெடி மற்றும் வெடிநிலையிலுள்ள வெடிபொருட்களை அடையாளப்படுத்தலும், அவற்றினை அகற்றுவதில் உதவிசெய்தலும்.
- ❖ சிறுவர் கழகங்களுக்கான TOT பயிற்சி
- ❖ பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள்
- ❖ வீதி நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு வழங்கல்
- ❖ பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித்திட்டம்.
- ❖ விளம்பர பதாதைகள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்களை காட்சிப்படுத்தல்

**இச்செயற்திட்டத்தின் பிரதான விளைவுகள்**

- ➢ சமூகத்தை மையப்படுத்திய மிதிவெடி அபாயக் கல்வித்திட்டத்தினூடாக 5 வகையான செயற்பாடுகளின் மூலம் 8693 வரையான மீள்குடியேறிய மக்களுக்கு மிதிவெடி அபாயக்கல்வி வழங்கப்பட்டது.
- ➢ 123 இல்லத்தரிசிப்புகள் மூலம் 551 குடும்ப அங்கத்தவர்களுக்கு மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வு வழங்கப்பட்டது.
- ➢ 1 கிராமமட்ட மிதிவெடி செயற்பாட்டு கண்காணிப்பு அமைப்பு உருவாக்கப்பட்டு வலுவூட்டப்பட்டது.
- ➢ 6 நிகழ்வுகளின் மூலம் 210 அரச உத்தியோகத்தர்களுக்கு மிதிவெடி மற்றும் வெடிபொருட்களினால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்பது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டது.
- ➢ 10 வகையான 1169 மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிநிலையிலிலுள்ள வெடிபொருட்கள் மக்களின் பங்களிப்புடன் அடையாளப்படுத்தப்பட்டு யுனிசெவ், பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் அனுசரனையுடன் மிதிவெடி அகற்றல் நிறுவனத்தினரால் அகற்றப்பட்டது.
- ➢ 11 சிறுவர் கழகங்கங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

## தகவல் வளநிலையம் (Information Centre)

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை வழங்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், எமது பணியாளர்கள் ஆகியோர் எமது நூலகத்தில் நூல்களை பெற்று வாசிப்பதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

## விசேட செயற்பாடுகள் (Special Activities)

### சமூக விழிப்புணர்வு தொடர்பான பதாதைகள் காட்சிப்படுத்தல்

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு எமது அமைப்பினால் சமூக விழிப்புணர்வு சார்ந்த பதாதைகள் நல்லூர் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள பெருந்தெருக்களில் காட்சிப்படுத்தியுள்ளோம். இச்செயற்பாட்டிற்கு Antra printers மற்றும் Jeyasri printers பதாதைகளை வடிவமைப்பதில் நிதிப்பங்களிப்பு செய்துள்ளனர்.

### சிறுதொழில் முயற்சிகள்

எமது நிறுவனமானது பெண்களுக்கான தொழில்வாய்ப்பை வழங்கும் நோக்கில் யாழ்சக்தி கம்பனியை நடாத்தி வருகின்றது. இதன் முக்கிய உற்பத்தி பொருளாக தட்டை வடை உற்பத்தி செய்யப்படுகின்றது. இக்கம்பனியானது நீர்வேலிப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கம்பனியின் மூலமாக 11 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கம்பனியானது இலாபகரமாக செயற்பட்டு வருகின்றது.

## உதவித்திட்டங்களின் விபரங்கள்

1. எமது நிறுவனத்தில் தொண்டராக பணியாற்றிய பின்லாண்ட் நாட்டை சேர்ந்த திரு.விக்கி சொலிவியர் என்பவரின் மூலம் 2 வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

2. அவுஸ்ரேலியா நாட்டை சேர்ந்த மைதிலி மகாலிங்கம் என்பவரின் உதவியுடன் 4 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 6000 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது.

3. பாடசாலை சீருடை கிழிந்த காரணத்தினால் பாடசாலை செல்லதிருந்த மாணவிக்கு பாடசாலை செல்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை.

4. தையிட்டி கிழக்கு கலாவள்ளி முன்பள்ளிக்கு எஸ்.பாலகிருஸ்ணன் சதீசன் என்பரின் உதவியுடன் கூரைவிரிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

5. வறியமாணவர்களுக்கான கடந்தகால மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டன.

6. வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உதவியுடன் 4 வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

7. வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உதவியுடன் வறிய மாணவர்கள் இருவருக்கு மாதாந்தம் தலா 1000 ரூபா வீதமும் பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு மாதாந்தம் 2500 ரூபா வீதமும் வழங்கப்படுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

8. வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உதவியுடன் 16 வறிய மாணவர்கள் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டது.

9. கருணைப்பாலத்தின் மூலம் கட்டுவன் மேற்கில் வறிய குடும்பம் ஒன்றிற்கு மாதாந்தம் 2000 ரூபா வீதம் வழங்கப்படுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

10. வறிய குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளின் கல்விக்காக TCT நிறுவனத்தின் மூலம் மாதாந்தம் 1000 ரூபா வீதம் வழங்கப்படுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

11. முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பிரதேச செயலகத்தின் மூலம் மாதாந்தம் 2000 ரூபா வீதம் வழங்கப்படுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

12. றொட்டறிக் கழகத்தின் உதவியுடன் வறிய குடும்பத்தை சேர்ந்த 13 பிள்ளைகளுக்கு புத்தகப்பை வழங்கப்படுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டது.

13. பெண் தலைமைத்துவ குடும்பமொன்றிற்கு பிரதேச செயலகத்தின் மூலம் மாதாந்தம் 3000 ரூபா வீதம் வழங்கப்படுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

14. வறுமை காரணமாக பாடசாலை ஒழுங்காக செல்லாத 8 மாணவர்களுக்கு மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு இணைப்பாளர் மூலம் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டது.

**அபிவிருத்திக் குழு- Development Forum.**

மாவட்டத்தின் பல்வகை அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இக் குழுவில் பல்கலைகழகப் பேராசிரியர்கள் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகள் அங்கம் வகிப்பதுடன் தமது ஆலோசனைகள் வழிகாட்டல்கள்களை வழங்கி வருகின்றனர்.

**இளையோர் செயற்திட்டம்:**

சுமார் 500 இளையோர்கள் யாழ். மாவட்டத்தில் பல்வேறு சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் இவர்களுக்கான பயிற்சி வழிகாட்டல்களை எமது நிறுவனம் வழங்கி வருகிறது.

தொடர்புகள்:

ச.செந்துராசா
நிறைவேற்றுப் பணிப்பாளர்
**SOND**
18/10 வைமன் வீதி நல்லூர்.
E mail: senthu@eureka.lk
www.sond.lk